Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No S.T.C.NO.1455/2021
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No.3, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆனந்தி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | தமிழரசன் | தொழில் | ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி துணை மேலாளர் |
| கிராமம் | திருப்பத்துர் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்துர் | வயது | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 17 day of March 2023.
**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை.-**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி ஜோலார்பேட்டை கிளையில் வங்கி துணை மேலாளராக பணி செய்து வருகிறேன். இந்நீதிமன்றத்தில் சாட்சி சம்மன் வழங்கபட்டதால் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். வெட்கடரமண பாபு என்பவருக்கு எங்கள் வங்கியில் கணக்கு எண் 11270015675 என்ற சேமிப்பு கணக்கு உள்ளது. பு.த.சா.ஆ.1 காசோலையானது எங்கள் வங்கியான ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா திருப்பத்துர் கிளையில் கணக்கின் உரிமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஜோலார்பேட்டை கிளையில் மேற்படி கணக்கை வெட்கடரமணபாபு தொடர்ந்து பயன்படுத்தி வருகிறார். மேற்படி பு.த.சா.ஆ.1 காசோலையானது இந்தியன் வங்கி எங்கள் வங்கிக்கு பண பரிவர்தனைக்காக அனுப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கணக்கில் 18.11.2021 ம் தேதியில் ரூ.35,188/— மட்டும் தான் வைப்புத்தொகையாக இருந்ததால், காசோலைக்குண்டான போதுமான தொகை இல்லாததால் பு.த.சா.ஆ.1 காசோலையை இந்தின் வங்கிகே திருப்பி அனுப்பிவிட்டோம். மேற்படி வங்கி கணக்கின் 01.01.2020 முதல் 08.03.2023 வரையுள்ள வங்கி கணக்கு பட்டியல் கொண்டு வந்துள்ளேன். **அந்த கணக்கு**

**பட்டியல் பு.த.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் மேற்படி வங்கி கணக்கு என்று முதல் தொடங்கபட்டது என்பதற்கான ஆவணமும் கொண்டு வந்துள்ளேன். **அந்த ஆவணம் பு.த.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.–**

காசோலையில் கையொப்பம் மட்டும் தான் எங்களால் பார்த்து உறுதிப்படுத்திக்கொள்ள முடியும், அதில் நிரப்பபட்டுள்ள கையெழுத்தை நாங்கள் பார்க்கமாட்டோம். காசோலையில் முன் பக்கமும் பின் பக்கமும் ஒரே கையெழுத்து தான் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலையில் உள்ள கையெழுத்து எதிரியுடையது இல்லை என்றால் எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை:** இல்லை

Signature of Witness.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No S.T.C.NO.1455/2021
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No.2, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அனுராக் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | காட்டூன் | தொழில் | இந்தியன் வங்கி உதவி மேலாளர் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 31 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 17 day of March 2023.
**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை.-**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் இந்தியன் வங்கி ஜோலார்பேட்டை கிளையில் வங்கி உதவி மேலாளராக பணி செய்து வருகிறேன். இந்நீதிமன்றத்தில் சாட்சி சம்மன் வழுங்கபட்டதால் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். நான் 03.10.2020 ம் தேதி துணை மேலாளராக பணியில் சேர்ந்தேன். என்னிடம் காட்டப்படும் பு.த.ச.ஆ.2 எங்கள் வங்கியில் கொடுத்த ரிட்டன் மொமோ தான். அதில் காசோலை 17.11.2021 அன்று வசூலுக்காக தாக்கல் செய்யப்பட்டு 18.11.2021 அன்று Exceeds Arrangements என்ற காரணத்திற்காக திருப்பபட்டுள்ளது, அதற்கு போதிய பணம் இல்லை என்பதும் ஒரு அர்த்தம் தான். அந்த காசோலை குறித்த அனைத்து விவரங்களும் பு.த.சா.ஆ.2 ல் சொல்லப்பட்டுள்ளது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.–**

பு.த.சா.ஆ. 2 ல் உள்ள கையெழுத்து எனக்கு முன்பு இருந்த மேளாலர் திரு.நிரஜ்வர்மா அவர்களின் கையெழுத்து ஆகும். பு.த.சா.ஆ.1 காசோலையை நான் பார்ததில்லை, தற்போது தான் நீதிமன்றத்தில் தான் பாரத்தேன்.

**மறுவிசாரணை:** இல்லை

Signature of Witness.